இன்றைய செய்தி நாளைய வரலாறு



# முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 01.06.2026

# இருபதே நாளில் இருண்ட காலம்!

இருபதே நாளில் இருண்ட காலத்தை தமிழ்நாட்டு மக்களுக்குக் காட்டி விட்டார் முதலமைச்சர் விஜய்.

**சந்தி சிரித்துக் கொண்டு இருக்கிறது சட்டம் ஒழுங்கு. தமிழ்நாட்டின் பல பகுதிகளில் மின்வெட்டு. மின்சாரம் இல்லாத வாழ்க்கைக்கு மக்களை பக்குவப்படுத்தி வருகிறார் விஜய். பேருந்துகள் இல்லாமல் அனைத்து பகுதியிலும் மக்கள் தொல்லைகளை எதிர்கொண்டு வருகிறார்கள். விவசாயப் பெருமக்கள் அனைத்து ஊர்களிலும் போராட்டம் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள்.**

**மதுக்கடைகள் மூடப்பட்டு வருகிறது என்பது மிகப்பெரிய நாடகம் என்பதை மக்கள் போராட்டங்கள் காட்டுகிறது. 'பாட்டிலுக்கு பத்து ரூபாய்' என்று பாட்டுப்பாடியவர் ஆட்சியில் 20 ரூபாய் வசூல் நடக்கிறது. ஆய்வு என்ற பெயரால் அவஸ்தையைக் கொடுத்து வருகிறார்கள் அமைச்சர்கள்.**

**த.வெ.க.வினர் ரீல்ஸ் எடுக்கும் இடமாக அரசு அலுவலகங்களை மாற்றி விட்டார்கள். மணல் கொள்ளை லாரிகள் மக்களால் சிறைப்பிடிக்கப்படுகிறது. நெல் கொள்முதல் செய்ய அதிக பணம் வசூலிப்பதாக பல்வேறு இடங்களில் புகார்கள் வந்துள்ளது.**

இந்த வரிசையில் வன்முறை வெறியாட்டம் மாநிலம் முழுக்க நடந்து கொண்டு இருக்கிறது.

* கோவையில் 10 வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். சிறுமி உயிரோடு இருப்பதாக முதலில் சொல்லிவிட்டு, பிணமாகக் கொடுத்துள்ளது போலீஸ். அம்மாவுக்குத் தெரியாமல் சிறுமியின் உடலை எடுத்துச் சென்றுள்ளார்கள். அவசர அவசரமாக எரித்துள்ளார்கள்.
* ராமநாதபுரத்தில் கனிமவளக் கொள்ளைக்கு எதிராக புகார் கொடுத்த வினோத் என்பவரை போலீஸ் அதிகாரியே மிரட்டி இருக்கிறார். வினோத் வீட்டில் குட்கா இருப்பதாகச் சொல்லி சோதனை நடத்தி இருக்கிறது போலீஸ்.
* காங்கேயத்தில் கஞ்சா ஆசாமிகள் சாலையில் அட்டகாசம் செய்ய அவர்களை அடக்க முடியாமல் போலீஸ்காரர்களே ஓட்டம் பிடித்தார்கள்.
* சென்னை ஓட்டேரியில் 5 கிலோ கஞ்சா பறிமுதல்.
* சென்னை புழல் பகுதியில் 3 கிலோ கஞ்சா, குட்கா, ஹான்ஸ் பறிமுதல்.
* சேலம் சீலநாயக்கன்பட்டியில் வீட்டின் பூட்டை உடைத்து 54 சவரன் கொள்ளை.
* நெல்லையில் பேராசிரியர் ஒருவர் வீட்டில் கொள்ளை.
* திருவள்ளூரில் 2 கிலோ கஞ்சா பறிமுதல்.
* கும்பகோணத்தில் பேனர் வைத்த த.வெ.க.வினரைத் தட்டிக் கேட்ட போலீஸார் கையை உடைத்துள்ளார்கள் அக்கட்சியினர்.
* த.வெ.க. கொடியுடன் வந்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தை தாக்கி இருக்கிறார்கள்.
* வேலூரில் செங்கல் சூளை உரிமையாளரிடம் மாமூல் கேட்ட த.வெ.க. ஒன்றியச் செயலாளரைக் கண்டித்து சாலை மறியல்.
* மதுராந்தகத்தில் நகைக்காக மூதாட்டியை கொலை செய்த த.வெ.க. நிர்வாகி.
* அமைச்சர் தென்னரசு பேரைச் சொல்லி வீடு வாங்கித் தருவதாக பணம் வசூலித்த த.வெ.க. பெண் நிர்வாகியைக் கண்டித்து முதியவர் ஒருவர் தற்கொலை.
* சென்னையில் 16 வயது சிறுவனுக்கு மது கொடுத்து பாலியல் கொடுமை செய்த தலைமைக் காவலர் கைது செய்யப்பட்டுள்ளார்.
* மதுரையில் பூட்டை உடைத்து 100 சவரன் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது.
* திருநின்றவூரில் தலைமைக் காவலர் ஓட்டிச் சென்ற வாகனம் மோதி 5 வயது சிறுமி பலியாகி இருக்கிறார்.
* ஈரோடு கல்லூரி அருகே 3 ஆயிரம் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளது.
* கடலூரில் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டு கும்பகோணம் தேசிய நெடுஞ்சாலையில் புதைக்கப் பட்டார்.
* திருவாரூரில் பூட்டிய வீடு உடைக்கப்பட்டு 13 சவரன் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது.
* தூத்துக்குடியில் மது போதை தகராறில் இளைஞர் ஒருவர் வெட்டிக் கொலை.
* நிலக்கோட்டையில் 8 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த 80 வயது முதியவர்.
* காட்பாடியில் அரசு பள்ளியின் பூட்டு உடைக்கப்பட்டு 18 மடிகணினிகள் திருடப்பட்டு உள்ளது.
* பெருங்களத்தூரில் கட்டட இடிப்புப் பணியில் ஈடுபட்டு இருந்தவரிடம் கத்தியைக் காட்டி மிரட்டி அடித்துள்ளார் த.வெ.க. வட்டச் செயலாளர்.
* திருவள்ளூரில் தொடர் கொள்ளைகள் நடத்தியதைக் கண்டுபிடிக்காத போலீஸாரைக் கண்டித்து மக்கள் போராட்டம் நடத்தினார்கள்.
* கிண்டியில் செல்போன் தொலைந்து போன பெண் கொடுத்த புகாரை வாங்க மறுத்துள்ளார்கள் போலீஸார்.
* மாமல்லபுரத்தில் மது போதையில் தாயை வெட்டிய மகன்.
* திருவாரூரில் செங்கல் சூளை தொழிலாளி வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.
* நெல்லையில் 4 பேருக்கு அரிவாள் வெட்டு விழுந்துள்ளது.
* தென்காசியில் 4 பேருக்கு அரிவாள் வெட்டு விழுந்துள்ளது.
* செங்கத்தில் ஆறாவது முறையாக கொள்ளைச் சம்பவம் நடந்துள்ளது.
* ஈரோட்டில் த.வெ.க. பேனர் விழுந்து மின் தடை ஏற்பட்டுள்ளது.
* சென்னையில் 61 வயதான மூதாட்டியை 5 பேர் சேர்ந்து கூட்டு பாலியல் கொடுமை செய்துள்ளார்கள்.
* திருவண்ணாமலையில் சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த விஜய் ரசிகர் மன்றத்தைச் சேர்ந்த இரண்டு பேர் கைது செய்யப் பட்டுள்ளார்கள்.
* மதுரையில் அழுகிய நிலையில் காருக்குள் இருந்து ஒரு பெண்ணின் உடல் மீட்கப்பட்டுள்ளது.
* தூத்துக்குடியில் பெட்ரோல் பங்கை 10 பேர் கொண்ட கஞ்சா கும்பல் அடித்து சூறையாடி இருக்கிறது.

**– இவை அனைத்தும் பத்து நாட்களுக்குள் நடந்தவை. தூய சக்தி ஆட்சியில், உள்துறையைக் கையில் வைத்திருக்கும் விஜய் சூறையாடி வரும் காட்சிகள் இவை.**

**'முப்பது நாளில் ஹிந்தி பாஷை' என்பதைப் போல, 'இருபதே நாளில் இருண்ட காலம்' என்று புத்தகம் போடத் தகுதி வாய்ந்தவர் விஜய்.**

## தலைமை செயலகத்தில் பயோமெட்ரிக்!

சென்னை, ஜூன் 1 –

சென்னை, தலைமை செயலகத்தில் உள்ள மனிதவள மேலாண்மை துறை அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு ஜூன் 1ம் தேதி முதல் பயோமெட்ரிக் வருகை பதிவேடு நடைமுறை அமலுக்கு வருகிறது. தலைமைச் செயலகத்தில் அதிகாரிகள், அலுவலர்கள் ஊழியர்கள் என்று 5000க்கும் மேற்பட்டவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்கள் காலை 10 மணிக்கு பணிக்கு வந்து மாலை 5.45 மணி வரை வேலை செய்கிறார்கள்.

அவர்களுக்கு இன்று (1ம் தேதி) முதல் பயோமெட்ரிக் கட்டாயம் என்று கூறப்பட்டு கடந்த சில மாதங்களுக்கு முன் பயோமெட்ரிக் முறை அமல்படுத்தப்பட்டது. அப்போது, தலைமை செயலக பணியாளர் சங்கம் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் பயோமெட்ரிக் நடைமுறை திரும்ப பெறப்பட்டது. காரணம், பயோமெட்ரிக் முறை பயன்படுத்தினால் ஊழியர்கள் பணிக்கு எப்போது வருகிறார்கள், எப்போது திரும்புகிறார்கள் என்பது தெளிவாக தெரியவரும். இதனால் பணியாளர்களுக்கு சிக்கல் ஏற்படுவதால், இதற்கு அவர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.



திருவண்ணாமலை, மலைவலபாதையில் அமைந்துள்ள கலைஞர் சிலை அருகில், பௌர்ணமிக்கு வருகை தந்த ஆன்மிக பெருமக்களுக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அறுசுவை உணவுகளை வழங்கினார். உடன் இரா.ஸ்ரீதரன், எஸ்.பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், பிரியா ப.விஜயரங்கன், ஏ.ஏ.ஆறுமுகம், சு.விஜயராஜ், குட்டி க.புகழேந்தி, ந.சீனுவாசன், சி.சண்முகம் உட்பட பலர் உள்ளனர்.

### தமிழ்நாடு ஆளுநர் மாளிகையில் திருவள்ளுவருக்குக் காவிச் சாயமா?

# ஜோசப் விஜய் தலைமையிலான புதிய அரசு வேடிக்கைப் பார்க்கலாமா?

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கண்டன அறிக்கை!

**சென்னை, ஜூன் 1 -**

**தமிழ்நாடு ஆளுநர் மாளிகையில் திருவள்ளுவருக்குக் காவிச் சாயமா? தமிழ்நாடு முழுவதும் கிளர்ச்சி வெடிக்கும்! ஜோசப் விஜய் தலைமையிலான புதிய அரசு வேடிக்கைப் பார்க்கலாமா? என்று திராவிடர் கழகத் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.**



அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னையில், ஆளுநர் மாளிகையாகிய 'மக்கள் பவன்' என்ற அந்த மாளிகையில் 'திருவள்ளுவர் திருவிழா' என்ற ஒன்றைக் கொண்டாடுவதாகவும், அதில் திட்டமிட்டே திருவள்ளுவருக்குக் காவிச் சாயம் அடித்திருப்பதாகவும் இன்றைக்குச் செய்திகள் வந்திருப்பது நமக்கு மிகுந்த வேதனையையும், அதிர்ச்சியையும் தருகிறது.

திட்டமிட்டே தொடர்ந்து பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். ஆகிய அமைப்புகள் திருவள்ளுவரை, காவி மயமாக்கிக் கொண்டிருப்பதைக் கண்டித்து, இதுவரையில் பலமுறை கண்டனக் குரல்கள் எழுப்பப்பட்டு, அந்தக் காவி நிறம் எல்லாம் திருவள்ளுவர் சிலையில் இடம்பெற முடியாத அளவிற்குத் தடுத்து நிறுத்திக் கொண்டிருந்தார்கள்.

**தமிழ்நாடு முழுவதும் கிளர்ச்சி வெடிக்கும்!**

இந்தப் போக்கு, அதற்கு முன்னால் அந்த மாளிகையில் இருந்த ஆர்.எஸ்.எஸ். காரரான ஆர்.என்.இரவி அவர்கள் தொடங்கியது. இப்போது அதைவிட ஒருபடி அதிகமாக, இப்போது பொறுப்பு ஆளுநராக இருக்கக்கூடிய அர்லேகர் என்பவர், அரசு நிகழ்வில் 'வந்தே மாதரம்' பாடலை முதலில் பாட வைப்பது – தமிழ்த் தாய் வாழ்த்துக்கு மூன்றாவது இடம்; இப்போது திருவள்ளுவர் திருவிழாவைக் கொண்டாடுகிறோம் என்கிற பெயரால், தமிழ்நாட்டின் உணர்வுகளுக்குச் சவால் விடுவதைப் போல, திருவள்ளுவருக்குக் காவியடித்திருக்கிறார்கள். அதனை எதிர்த்து மிகப் பெரிய ஒரு கிளர்ச்சி அனைவராலும் நடத்தப்படவேண்டிய அவசியம் உருவாக்கப்படுகிறது.

**தமிழ்நாடு அரசு கண்டனத்தைத் தெரிவிக்கவேண்டாமா?**

தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள புதிய அரசு, ஜோசப் விஜய் அவர்கள் தலைமையில் அமைந்துள்ள அரசு இதையெல்லாம் பார்த்துக் கொண்டு மவுனமாக இருக்கப் போகிறதா? தன்னுடைய வன்மையான கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டாமா?

ஆகவே, உடனடியாக இதற்கு நடவடிக்கைகள் தேவை. தமிழ்நாடு முழுவதும் இதைக் கண்டித்து அறப்போராட்டங்கள் வெடிக்கும்.

### திருவண்ணாமலை மாநகர தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 103வது பிறந்த நாள் விழா!

## முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு தலைமையில்!

*திருவண்ணாமலை, ஜூன் 1 -*

*திருவண்ணாமலை மாநகர தி.மு.க. சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழா நடைபெறவுள்ளது. முன்னாள் அமைச்சர் எ.வ. வேலு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.*

*03.06.2026 புதன்கிழமை காலை 8.00மணிக்கு, திருவண்ணாமலை, அறிவொளிப் பூங்கா அருகிலிருந்து... ஓய்வறியாச் சூரியனாய், ஓங்குப்புகழ் தலைமகனாய், கழகத்தின் காவலனாய், தொண்டர்களின் உயிர் துடிப்பாய் துலங்குகின்ற உயிர் மூச்சாம், தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழா மாபெரும் ஊர்வலம் நடைபெறவுள்ளது.*

*முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற தி.மு.கழக கொறடாவுமான எ.வ. வேலு தலைமை வகிக்கிறார்.*

*சட்டப்பேரவை முன்னாள் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, தொகுதி அமைப்பாளர் எ.வ. குமரன், கழக மருத்துவரணி துணை தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை,*

*மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமை செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், மாவட்டப் பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் ப்ரியா ப.விஜய ரங்கன், விஜயலட்சுமிரமேஷ், மாநில தொ.மு.ச., துணைத் தலைவர் க.சௌந்தரராசன், செய்தித்தொடர்பு இணைச் செயலாளர் சிவ ஜெயராஜ், மாநகர மேயர் நிர்மலாவேல்மாறன், அமைப்புசாரா தொமுச., ஏ.ஏ.ஆறுமுகம், துணை மேயர் சு.ராஜாங்கம்,*

*பிறந்த நாள் விழா ஏற்பாடுகளை மாநகர செயலாளர் ப.கார்த்தி வேல் மாறன் செய்து வருகிறார்.*

*பிறந்த நாள் விழாவில் மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ஜெ.மெய்கண்டன், கு.கணேஷ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா. கார்த்திகேயன், டாக்டர் பிரவீன்ஸ்ரீதரன், பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு. சர்தார் காசீம், எஸ்.டி.ஆர். எஸ்.பாபு, பி.கே.ஏ.அருண், இரா.ஜோதி, இரா.அன்பரசு, பவர்.வ.அன்பரசு, த. பழனிவேல், கற்பகம்சரவணன், உ.நித்யா, டாஸ்மாக் இரா.ஆறுமுகம், ஒன்றிய செயலாளர்கள் மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், மாநகர பகுதி செயலாளர்கள் சு.விஜி (எ) விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பா. ஷெரீப் மற்றும் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.கண்ணதாசன், மாநகர துணை செயலாளர்கள் மு.கருணாமூர்த்தி, வட்டி அருணாச்சலம், ஜீவரேகாவிஜயராஜ், மாவட்ட பிரதிநிதிகள் இல.குணசேகரன், அ.கண்ணன், கோல்டு.எஸ்.பிரபு, ஹக்கிம்சேட், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் மண்டி ஆ.பிரகாஷ் மற்றும் மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், அணி சார்ந்த அமைப்பின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொள்கின்றனர்.*

### மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமை!

# வாசுதேவநல்லூர் தொகுதி நன்றி அறிவிப்பு பொதுக்கூட்டம்!

## கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. சிறப்புரை!

*தென்காசி, ஜூன் 1 -*

*தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:*

*தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட புளியங்குடி கலைஞர் திடலில் இன்று ( 01.06.2026 - திங்கட்கிழமை) மாலை 5 மணி அளவில் வாசுதேவநல்லூர் தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்ற தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றி அறிவிப்பு பொதுக்கூட்டம். எனது தலைமையில் (மாவட்ட செயலாளர் ஈ.ராஜா) நடை பெறுகிறது.*

*இந்நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர் மண்டல பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்கள்.*

*இந்த மாபெரும் நன்றி அறிவிப்பு பொதுகூட்டத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழகச் செயலாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள்,*

*கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக தொண்டர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொள்ள வேண்டும்.*

*இவ்வாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.*



கழகத் தீர்மானக்குழு நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் நேற்று ( 31.05.2026 – ஞாயிற்றுக்கிழமை) அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் கூட்ட அரங்கில், தீர்மானக்குழுத் தலைவர் கவிஞர் தமிழ்தாசன் தலைமையில் தீர்மானக்குழு செயலாளர் அக்ரி கே.பி.டி.கணேசன் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தீர்மானக்குழு துணைத் தலைவர் டாக்டர் மாசிலாமணி, தீர்மானக்குழு இணைச் செயலாளர் பா.சத்தியமூர்த்தி , தீர்மானக்குழு இணைச் செயலாளர் பி.நாச்சிமுத்து, தீர்மானக்குழு உறுப்பினர்கள் க.வேங்கடபதி, ச.தங்கவேலு, ஆர்.சேதுநாதன், செஞ்சி சிவா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.